# விடுகதைகள்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com


# விடுகதைகள்


உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

‘**விடுகதை**’ விடு + கதை, ஒருவரின் நுண்ணறிவினை அறிந்துகொள்ளும் வகையில், இன்னொருவரால் விடப்படுகின்ற கதையே விடுகதை என்பர். படிப்பதற்கு வினாவினைப் போன்று இருந்தாலும், கேட்பவரின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமைந்திருக்கும். பத்து விடுகதைகள் அடங்கிய இத்தொகுப்பில், பழங்கள், விலங்குகள், விழாக்கள், உணவுப் பொருட்கள், பறவைகள், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள் எனப் பலவகையான பொருட்களின் குணம் மற்றும் அவற்றின் செயல்பாடுகள் விடுகதைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றைப் படித்து விடை காணலாம் வாருங்கள்.

சுவையில் இனிப்பு தந்து






உடம்பெல்லாம் கீறல் கொண்டு

தலையில் கிரீடம் உண்டு



பழங்களின் ராணி என்று
கூறுவார்கள் என்னை?

# புள்ளிகளை இணைத்து விடுகதைக்கான விடை கண்டறியுங்கள்!



நான்கு கால் நல்லவன் நான்!






திருடனுக்குக் கெட்டவன் நான்!

வீட்டுக்குக் காவலன் நான்!



விரைந்தோடும் வித்தகன்
நான் யார்?

# புள்ளிகளை இணைத்து விடுகதைக்கான விடை கண்டறியுங்கள்!



ஆண்டுக்கு ஒருமுறை நான்
வருவேன் !







அனைவரும் மகிழச்
செய்திடுவேன்

ஆண்டவன் உழவன்
என்றுரைக்கும்



அன்னைத் தமிழின் பண்டிகை
நான் யார்?

## புள்ளிகளை இணைத்து விடுகதைக்கான விடை கண்டறியுங்கள்!



அம்மா போடும் வட்டம்






அழகாய் இருக்கும் வட்டம்

சுவையைக் கூட்டும் வட்டம்



சுட்டுத் தின்ன இஷ்டம்
இது என்ன?

## புள்ளிகளை இணைத்து விடுகதைக்கான விடை கண்டறியுங்கள்!



கடிவாளம் எனக்கு உண்டு






காற்றோடு நடையும் உண்டு

தொடும் முன்னே நான் அழுவேன்



தொட்டவுடன் பேசிடுவேன்

## புள்ளிகளை இணைத்து விடுகதைக்கான விடை கண்டறியுங்கள்!



உன்னுடனே நான் இருப்பேன்







ஒன்றுக்கு இரண்டாய்
துணையிருப்பேன்

‘இருக்கை’ இறுதியில் நான்
இருப்பேன்



எடுக்கையில் கொடுக்கையில்
உதவிடுவேன்

# புள்ளிகளை இணைத்து விடுகதைக்கான விடை கண்டறியுங்கள்!




பந்து போல வடிவிருக்கும்






பார்ப்பவர்க்கெல்லாம் அது பிடிக்கும்

மெல்ல மெல்ல உடல் இளைக்கும்




மெதுமெதுவாக அது பெருக்கும்.

# புள்ளிகளை இணைத்து விடுகதைக்கான விடை கண்டறியுங்கள்!



தலையைச் சீவினால்






சிங்கார நாட்டியக்காரன்

குழந்தை கரங்களிலே....



குடியிருக்கும் கருப்பழகன்

## புள்ளிகளை இணைத்து விடுகதைக்கான விடை கண்டறியுங்கள்!



காவி உடை அணியாத தவசி
இவன்






கை இரண்டும் இல்லாமல்
வான் பறப்பான்

ஓவியங்கள் ஏதுமில்லா
உடம்புக்காரன்



ஒற்றைக் கால் தவம்புரியும்
வித்தைக்காரன்

புள்ளிகளை இணைத்து விடுகதைக்கான விடை கண்டறியுங்கள்!



காற்றைக் குடித்து காற்றில்
பறப்பேன்






குழந்தை கையில் இருக்கவே
துடிப்பேன்



ஊத ஊதப் பெரிதாய் ஆவேன்

ஒரு நொடி போதும் உடைந்தே
போவேன்

# புள்ளிகளை இணைத்து விடுகதைக்கான விடை கண்டறியுங்கள்!



## புள்ளிகளை இணைத்து விடுகதைக்கான விடை கண்டறியுங்கள்!

